பிளாஸ்ரிக் - எவர்சில்வர்
அழகு சாதன அன்பளிப்புப் பொருள்களையும்
கைக்கடிகாரங்களையும்
தெரிவு செய்ய நாடுங்கள்
ஞானம்
விற்பனைக் கூடம்
66, சந்தோசம் தெரு
யாழ்ப்பாணம்.
[சி-571]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

அழகுசாதன - அன்பளிப்பு
எவர்சில்வர்
பொருள்களையும்
கைக்கடிகாரங்களையும்
மலிவு விலையில் வாங்க
ஞானம்
விற்பனைக் கூடம்
66, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.
[சி-571]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 15 திங்கட்கிழமை (27-02-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 95

# சந்திரிகாவுக்கு தலைவர் பிரபா கடிதம்

# பாதை திறப்பது பற்றிய அரசின் அறிவிப்பு

# சமாதான சூழலை முன்னெடுக்க உதவாது!

## இராணுவ போர் தந்திரோபாய நலன்களுக்கே ஸ்ரீலங்கா அரசாங்கம் முதன்மை கொடுக்கின்றது



யாழ்ப்பாணம், பெப்ரவரி 27

"பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் மக்களுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதாக, ஒருதலைப்பட்சமான முறையில் விடுக்கப்பட்ட அறிவிப்பு அரசின் பழைய பல்லவிதான். இந்த அறிவிப்பு பொய்யான பிரசார இயக்கத்திற்கு உதவலாமே தவிர சமாதான சூழலை முன்னெடுக்க உதவப் போவதில்லை. இதையிட்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த ஒருதலைப்பட்ச அறிவிப்பு ஒரு விடயத்தை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது பரந்துபட்ட தமிழ் மக்களின் அவசரத் தேவைகளுக்கு மேலானதாக, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தின் போர்த் தந்திரோபாய நலன்களுக்கே அரசாங்கம் முதன்மை கொடுக்கின்றது"

— இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

பெப்ரவரி 25 ஆம் திகதியிடப்பட்ட இந்தக் கடிதம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு ஊடாக நேற்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தின் விவரம் வருமாறு:-

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
25-02-95.

கனம் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
ஸ்ரீலங்கா ஜனாதிபதி,
ஜனாதிபதியின் தலைமைச் செயலகம்,
கொழும்பு.

அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,

16, பெப்ரவரி 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைத்தது நன்றி. உங்களது செயலர் திரு. பாலபத்தபெண்டி அவர்களுக்கு 13, பெப்ரவரி 1995 அன்று ஒரு முக்கிய கடிதம் அனுப்பிவைத்தோம். அதற்கான பதிலைக் காத்திருந்த காரணத்தால் உங்களுக்குப் பதிலெழுத தாமதமாகியது.

திரு. பாலபத்தபெண்டி அவர்கள் இன்று (25-02-95) திரு தமிழ்ச்செல்வனுக்கு எழுதிய மிகவும் சுருக்கமான கடிதத்தில் நாம் எழுப்பிய மிகவும் பாரதூரமான விடயங்கள் எதற்கும் பதில்தரவில்லை; மோதல் தவிர்ப்பு உடன்பாடு சம்பந்தமான நடைமுறைகள், கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல், பேச்சுக்களைத் தொடர்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் பதில் அளிக்கவில்லை. இந்தப் பிரச்சினை எல்லாவற்றையும் ஓரம்கட்டிவிட்டு வடக்கில் வாழும் தமிழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு இவ்வாண்டு நான்கு புதிய கப்பல்கள்!

கொழும்பு, பெப். 27

ஸ்ரீலங்கா கடற்படை இந்த ஆண்டில் நான்கு புதிய கப்பல்களை கட்டம், கட்டமாக வாங்கவிருககின்றது. இவற்றில் இரண்டு பீரங்கிப் படகுகளாகும் மற்றவை தரை இறங்கும் கப்பல்கள் என்று தெரிவிக்கபபடுகிறது. எனினும் இக்கப்பல்களை விற்பவர் பீரங்கிப்படகு ஒன்றுக்கு பதிலாக "சப்சேஷர்" (Sub-Chaser) என்றவித்தியாசமான கப்பல் ஒன்றை இலங்கைக்கு விற்கும் சாத்தியம் பற்றி ஆராய்ந்து வருவதாக 'சஜலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. இப்புதியரக கப்பல் பீரங்கிப்படகை விட பெரியதும் அதிவேகமாகச் செல்வதாகும் என்றும் தெரிவிக்கப்டுகிறது

கொமடோர் ஒருவரின் தலைமையிலான கடற்படைத்தூதுக்குழு ஒன்று அண்மையில் பங்களாதேஷுக்கு சென்று இப்புதிய ரக கப்பலைப் பார்வையிட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்புலிகளின் புதிய சவால்களை எதிர்நோக்க கடற்படையின் பலத்தை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும் என்று பாதுகாப்பு பகுப்பாய்ப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மகாவலித் திட்ட அதிகாரி வியாழனன்று சுட்டுகொலை

கொழும்பு, பெப் 27

மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியான உபாலி ஜெயசூரியா என்பவர் கடந்த வியாழனன்று கடமை முடிந்து வீடு திரும்புகையில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவதினம் பொல்கொல்லை அணைக்கட்டு வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த நபர் தம்மிடம் இருந்த கைத்துப்பாக்கியால் அவரின் தலையை நோக்கிச் சுட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உள்ளூராட்சி தேர்தலை எதிர்த்து சட்ட நடவடிக்கை

### ஐக்கிய தேசிய கட்சி அறிவிப்பு

கொழும்பு, பெப்.27

எதிர்வரும் மே மாதம் நடைபெறவேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைக்குமானால் அதனை எதிர்த்து வழக்குத் தொடரப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கே. என். சொக்ஸி தலைமையிலான ஐ.தே.கவின் சட்ட ஆலோசனைக் குழு இது தொடர்பாக ஆராய்ந்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

அதனை அடுத்தே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதென முடிவு எடுக்கப்பட்டதாக 'சிறிகோத்த' பேச்சாளர் ஒருவர் "லங்கா தீப" பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## சமாதானத் தீர்வையே இந்தியா வலியுறுத்துகிறது

### சங்கர் தயாள் சர்மா தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 27

இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை பொறுத்தவரை இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்தியா எப்பொழுதுமே வலியுறுத்தி வந்துள்ளது.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா கூறியிருக்கிறார்.

இலங்கையின் புதிய தூதராக புதுடில்லியில் கடந்த வியாழக்கிழமை பதவியேற்றுக் கொண்ட திரு. ... முனசிங்கவின் நியமனப் பத்திரங்களை கையேற்றபோது இந்திய ஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார்

இலங்கையின் முன்னேற்றம், ஐக்கியம், ஸ்திரத்தன்மை, ஒருமைப்பாடு என்பவை பேணப்பட வேண்டும் என்று இந்தியா கூறி வந்துள்ளது. சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை எடுக்கும் முயற்சி வெற்றிபெற வேண்டும் என்றும் இந்தியா வாழ்த்துத் தெரிவித்து வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-4)

## பாண் தயாரிப்பதை இடை நிறுத்த வெதுப்பக உரிமையாளர்கள் முடிவு!

யாழ்ப்பாணம், பெப். 27

பாண் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பதை இடைநிறுத்துவது என யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் நேற்று முடிவு செய்திருக்கிறது.

நேற்று நடைபெற்ற சங்கத்தின் அவசரக் கூட்டத்தில் இதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கத்துக்கு வழங்கப்படும் மாவின் அளவைக் கூட்டித் தருவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்ததை உறுதிப்படுத்தி கடந்த 15-02-1995இல் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி சங்கத்துக்கு கடிதம் அனுப்பினார் என்றும்—

ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக சங்கத்துக்கு வழங்க வேண்டிய மாவில் அரைவாசிப் பகுதியே வழங்கப்பட்டுள்ளது என்றும்—

இது சம்பந்தமாக கடந்த வெள்ளியன்று அரச அதிபரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி, வழங்கப்படும் மாவை சங்கமும் அங்கத்தவர்களும் துஷ்பிரயோகம் செய்வதாகக் குற்றம் சாட்டினார்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தலின்போது சதிப் புரட்சி திட்டம்: 3 பிரிகேடியர்கள் மீது விசாரணை!

கொழும்பு, பெப். 27

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது இராணுவச் சதிப்புரட்சி ஒன்றை நடத்த முயன்றதாக கூறப்படும் சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வரும் பொலீஸ் விசாரணைக்குழுவினர் அடுத்த சிலதினங்களில் குறைந்தது மூன்று இராணுவ பிரிகேடியர்களை விசாரிப்பதுடன், அவர்களிடமிருந்து வாக்குமூலங்களை பதிவு செய்ய விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மற்றும் சிலருடன் சேர்ந்து தேர்தல் தினத்தன்று நிர்வாகத்தைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சதி செய்ததாக இரண்டு பிரிகேடியர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்று 'சஜலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு பிரிகேடியர்களும் தற்போது வடபகுதிப் போர் முனையில் பணிபுரிந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது பிரிகேடியர் கொழும்பில் பணிபுரிந்து வருகின்றார் என அடையாளங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போரைத் தூண்டும் செயல்களில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்

### புலிகளின் மட்டு - அம்பாறை பொறுப்பாளர் அறிக்கை

கொழும்பு, பெப். 27

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை மீதான நம்பிக்கையீனத்தைக் காட்டும் வகையில இராணுவம் செயற்பட்டு வருகிறது. மீண்டும் போரை ஆரம்பிப்பதை தூண்டுவது போன்று இராணுவத்தின் செயல்கள் அமைந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் அம்பாறை — மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரிவு

[3ஆம் பக்கம் பார்க்க]

## "நரோமா" இன்று வராது

யாழ்ப்பாணம், பெப் 27

கடும் கடற் கொந்தளிப்பு காரணமாக இன்று நடைபெறவிருந்த "நரோமா" பயணிகள் கப்பல் சேவை தடைப்பட்டுள்ளது என்றும் —

எனவே இன்று இங்கிருந்து அக்கப்பலில் செல்ல தெரிவு செய்யப் பட்ட பயணிகள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு செல்ல வேண்டியதில்லை எனவும் யாழ் மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## கொழும்பில் விமான விபத்து

கொழும்பு, பெப். 27

உபாலி நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் ஒன்று நேற்று நண்பகல் இரத்மலானையில் தொழிற்சாலை ஒன்றின் மீது விழுந்து விபத்துக்குள்ளானது.

இதனால் அந்த விமானம் பலத்த சேதமடைந்தது. தொழிற்சாலைக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

செஸ்னா ரகத்தைச் சேர்ந்த அந்த விமானத்தை ஓட்டிச்சென்ற சீன நாட்டு பெண் விமானி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-எ-7)

## முதல் உத்தியோகபூர்வ விஜயம்:

## சந்திரிகா அடுத்த மாதம் டென்மார்க் செல்கிறார்

கொழும்பு, பெப். 27

ஜனாதிபதி சந்திரிகா தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை அடுத்த மாதம் 6ஆம் திகதி மேற்கொண்டு டென்மார்க் செல்லவிருக்கிறார் என அறிவிக்கப்படுகிறது.

டென்மார்த் தலைநகர் கொபன்ஹேகனில் மார்ச் 6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் சமூக அபிவிருத்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று

## இறந்த கணவரின் கண்ணை தானம் செய்தார் மனைவி

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று கண்தான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த ஏச் ஏ.டி. இ‌னேஷ் சாள்ஸ் 68வயது) என்பவரின் இரண்டு கண்களும் சத்திர சிகிச்சை மூலம் பாதுகாப்பாக எடுத்துவரப்பட்டன.

இளைப்பாறிய பதிவுசெய்யப்பட்ட வைத்தியரான திரு. சாள்ஸ் நேற்றுக்காலை யாழ். வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சில நிமிட நேரத்தில் இறந்து விட்டார்.

அவரது மனைவி தமது கணவரின் கண்களை தானம் செய்ய விரும்பியதை அடுத்து கண்கள் அகற்றப்பட்டன.

அவரது இரண்டு கண்களும் நல்ல நிலையில் இருப்பதால் கண் பார்வை இல்லாத இருவருக்கும் அனேகமாக இன்று மாற்றுச் சிகிச்சை மூலம் பொருத்தப்படலாம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (அ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனையாகிறது**

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A Q பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தக சாலையிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தக சாலை, நல்லூர். (சி 384)

**மணமக்கள் தேவை**

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 1-3-95 புதன்கிழமை பெற்றுக் கொள்ளலாம். முன்னர் பதிவு செய்தோரும் இத்திகதியில் பெற்றுக் கொள்ளவும்: நல்லூர் விடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (35410)

**மாணவர்கள் கவனத்திற்கு**

விற்பனையாகின்றது: புதிய பாடநூல் நாமும் சுற்றாடலும் ஆண்டு 2 விளக்கப்படங்களுடன் கூடியது 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 2க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளியீடு: கு. வி அச்சகம், யாழ்ப்பாணம். (8354)

விற்பனையாகின்றது; புதிய செயல் நூல் தமிழ் மொழி ஆண்டு 1, ஆண்டு 2 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள முதல் மொழி - தமிழ் - பாடத்திட்டத்தின் ஆறுவிடயப் பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. கேட்டல் — இரசித்தல், பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடுகள், பேச்சு மூலம் வெளிப்பாடு, வாசிப்பு, எழுத்து. வெளியீடு: கு. வி அச்சகம், யாழ்ப்பாணம். (8355)

**புலமைப் பரிசில் - 1995**

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் [புதியபாடத்திட்டத்தின்படி பொது விவேகம், பொது அறிவு, விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தின் 2வது 4வது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம் (8238)

**REPAIRS!**

Repairs! Are your Radios T.Vs, Decks Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee. Dilka Watch and Radio Works 284, Stanley Road (Ariyakulam Junction) Close to Vanavil Jaffna, Branch Kandy Road, Chavakachcheri. [சி-364]

## விக்டர் ஐவனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

கொழும்பு, பெப். 27

1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியான 'ராவய' பத்திரிகைகளில் பிரசுரமான செய்திகளின் மூலம் தனது கௌரவத்திற்குப் பங்கம் விளைவித்தார் என முன்னாள் ரயில்வே பொதுமுகாமையாளரால் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மான நஷ்ட வழக்கு கொழும்பு மாவட்ட நீதிபதியால் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ரயில்வே பொதுமுகாமையாளர் பீ. டபிள்யு ஏ. கே. சில்வா தமக்கு மான நஷ்டமாக ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவை கோரியிருந்தார். [ஐ-10]


BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

AL 95 மாலைநேர வகுப்புகள்

மீட்டல் பாடத்திட்டம்

பொருளியல்

S. வரதராஜன்

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி.
6 - 30 p. m.

ஆரம்பம்: 27 - 02 - 95

(சி/394)


## நீங்காத நினைவுகளுடன் 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 31 - 10 - 1936

மறைவு: 10 - 03 - 1994

**திருமதி விஜயலட்சுமி கனகராசா**

திதி: 27 — 02 — 1995

ஓ! தாயே ஓராண்டு நீண்டதுவோ
எமைப் பிரிந்து நீர் சென்று
நின்னை நினையாத நாளில்லையே
அம்மா! எம் குலவிளக்கே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சாந்தகம்"
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு. [சி-683]

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி தாவீதுராஜா அழகம்மா**
(சின்னராசா)

அவனிக்கு வரவு: 25 — 05 — 1945

அவனிடம் விரைவு: 18 — 01 — 1995

அன்பின் சிகரமே!
ஆருயிர் அக்காவே!
இன்னல்கள் பல கடந்து
ஈன்றவள் போல் பாசமுடன்
உலகமிது என்றுணர்த்தி
ஊரறிய வாழ வைத்து
பாசமதைக் காட்டிவிட்டு
பாதியிலே சென்றதுமேன்?

எனது சகோதரியின் மரணச்சடங்கின் போதும், அந்தியேட்டிக் கிரியைகளின் போதும் கலந்து பல வழிகளிலும், உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றி நவில்கின்றோம்.

இன்று காலை 6-00மணிக்கு உரும்பிராய் புனித மைக்கேல் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரது ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்!
அன்புச் சகோதரன் நவரட்ணம (காந்தி) குடும்பம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (35405)

## சிவராத்திரி நிகழ்வுகள்

இந்துக்களின் விசேட நிகழ்வுகளில் ஒன்றான மஹா சிவராத்திரி தினம் இன்றாகும். இந்நிகழ்வை யொட்டி ஆலயங்களில் விசேட பூசைகள், அபிஷேகங்கள், சொற்பொழிவுகள் பஜனைகள், இசைக்கச்சேரிகள், கலை நிகழ்வுகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

உரும்பிராய் ஞானவைரவர் ஆலய சிவராத்திரி விழாவில் சங்காபிஷேகம் கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றுடன் திர்க்கசுமங்கலி வில்லிசை நிகழ்வு, ஈழத்து சௌந்தரராஜன் குழுவினரின் வில்லிசை நிகழ்வு, பரிசில் வழங்கும் வைபவம் என்பன நடைபெறும்.

★ ★ ★

ஊரெழு கிளானைப் பதி ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்மன் ஆலய சிவராத்திரி விழாவில் இ. ஜெயராஜ் வழங்கும் வாக்கிறந்த பூரணம் சொற்பொழிவு, சிவலிங்க சாட்சி சங்கீத கதாப்பிரசங்கம் 'நாளும் நல்லவனும்' சொற்பொழிவு என்பன நடைபெறும்.

★ ★ ★

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், ஊரெழு வடக்கு சக்திபுரம் வேல் முருகன் ஆலயம், நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம், யாழ். பழைய பஸ்நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், புலோலி பசுபதீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றிலும்—

கரவெட்டி உச்சில் அம்மன் ஆலயம், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்— கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பதி முருகன் ஆலயம் பொலிகண்டி கந்தவனப் பதி ஆலயம் ஆகியவற்றிலும்—

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், நவாலி வடக்கு சிவன் கோயில், திருநெல்வேலி ஐயனார் ஆலயம், உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயம், கொழும்புத்துறை வில்லையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலும்—

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோயில், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம், அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோயில், மாகியம்பதி ஸ்ரீ தெட்சணாமூர்த்தி கைலாய சிவன் கோயில் ஆகியவற்றிலும் —

கோப்பாய் அத்தி தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் மற்றும் யாழ். மத்தி பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனம், அரியாலை பகவான், திருநெல்வேலி ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் ஆகியவற்றிலும் —

ஆவரங்கால் சிவன் தேவஸ்தானம், மானிப்பாய் ஸ்ரீ வேலக்கைப் பிள்ளையார் ஆலயம், வண்ணை கோட்டையம்பதி ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகியவற்றிலும் —

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயம், யாழ் நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் ஆலயம், கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், கொழும்புத்துறை கிழக்கு மணலியம் பதி அம்மன் - ஐயனார் ஆலயம் ஆகியவற்றிலும் —

தொல்புரம் கொட்டடி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயம், கொழும்புத்துறை மன்றுளாடும் விநாயகர் ஆலயம், அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராச வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், கோப்பாய் பழைய வீதி, மனோன்மணி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலும்—

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீ ஞான வைரவர், வழக்கம்பரை அம்பாள் ஆலயம், மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில், கந்தர்மடம் ஸ்ரீ உதய நாகபூஷணி அம்பாள் கோவில் ஆகியவற்றிலும் சிவராத்திரியை ஒட்டிய பூசை, விசேட நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

## சிவ தீட்சை

யாழ்ப்பாணம், பெப். 27

மகா சிவராத்திரி தினமான இன்று காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட பாடசாலைகளின் சைவ சமய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிவ தீட்சை வழங்கும் நிகழ்ச்சி இடம்பெறும். கூரணவாய் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் தீட்சை வழங்குவார். (உ)

## நோயாளர் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பெப்ரவரி மாத கொடுப்பனவு சாவகச்சேரி கொடிகாமம் அஞ்சல் நிலையங்களிலும் ஏனைய உப அஞ்சல் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது

இதுவரை காலமும் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டு வந்த மேற்படி கொடுப்பனவு பெப்ரவரி மாதம் முதல் அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படுவதால் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் [illegible] சாவகச்சேரி அஞ்சல் [illegible] ளார். (க-116)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

**சின்னத்துரை நித்தியானந்தவேல்**

(தலைவர், நெடியகாட்டு திருச்சிற்றம்பல பிள்ளையார் கோயில் வல்வெட்டித்துறை)

எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி, இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தந்தையாரது 31 ஆம் நாள் நிகழ்வும். அந்தியேட்டிக்கிரியைகளும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும், தொடர்ந்து வீட்டில் சபிண்டீகரணமும், மதிய போசனமும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர், உறவினர்கள்.

செம்பாடு,
வல்வெட்டித்துறை. [35375]

மகா சிவராத்திரியான இன்று
மூன்று ஆலயங்களில்

## ★ முத்தமிழ் பட்டி மன்றம் ★

[இயல், இசை, நடிப்பு]

தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது
கவிஞர் கல்யாணசுந்தரம் பாடல்களிலா, கவிஞர் கண்ணதாசன் பாடல்களிலா?

- ✶ உடுவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலயம்
- ✶ வண். வட மேற்கு ஆறுகால் மடம் நாவலடி அருள் மிகு ஞான வைரவர் ஆலயம்
- ✶ திருநெல்வேலி, பிள்ளையார் வீதியில் உள்ள அருள்மிகு ஐயனார் தேவஸ்தானம்.

### உடுவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலய முன்றில்

நேரம்: மாலை 6 மணி

முத்தமிழ் பட்டி மன்றம்
(இயல், இசை, நடிப்பு)
18 ஆவது மேடையேற்றம்

தலைப்பு: தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது யார் பாடலில்?

நடுவர்: திரு. அ. குமாரவேலு B. A. அவர்கள்

| கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர் கண்ணதாசன் |
| --- | --- |
| திரு. கனக நாகேஸ்வரன் | திரு. எம். எஸ். தயாளன் |
| திரு. க. திருநாவுக்கரசு | திரு. எஸ் கணேசலிங்கம் |
| திரு. கோ. சி. வேலாயுதம் | திரு. எஸ். மகேந்திரன் |
| திரு. பசு. ஸ்ரீபதி | திரு. க. கணேசலிங்கம் |
| திரு. எம். பி. அருளானந்தம் | திரு. செ. இலகுநாதன் |
| செல்வன் சங்கர் வாமன் | திரு. க. கனகரட்ணம் |
| பொன். பாஸ்கரன் | திரு. இரா. செல்வவடிவேலு |
| திரு. கே. கே இராஜரட்ணம் | திரு. எ. ஆர்த்திகன் |
| செல்வன் ஜீவமோகன் | திரு. இ. ஸ்ரீ நடராசா |
| திரு. செ. சத்தியமூர்த்தி | திரு. பொன். மதிமுகராசா |

பட்டி மன்ற அமைப்பாளர்: திரு. பொன். மதிமுகராசா
எம். ஜி ஆர். இல்லம், தாவடி.

✶ சொற்பொழிவு: திரு. செ. சத்தியமூர்த்தி

### வண். வட மேற்கு ஆறுகால்மடம் நாவலடி அருள்மிகு ஞானவைரவர் சுவாமி தேவஸ்தானத்தில்

- ✶ வில்லிசை — என். எஸ். சர்மா வழங்கும் "பார்வதி கல்யாணம்"
- ✶ சொற்பொழிவு — திரு. க. கணேசலிங்கம் (முன்னாள் அதிபர்)
- ✶ பட்டி மன்றம் — தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது கவிஞர் கல்யாணசுந்தரத்தின் பாடலிலா? கவியரசு கண்ணதாசனின் பாடலிலா?
- ★ நடுவர் — திரு. அ. குமாரவேலு அவர்கள் (21 ஆவது மேடையேற்றம்)
- ✶ பட்டிமன்ற அமைப்பாளர் — திரு. பொன். மதிமுகராசா அவர்கள், எம். ஜி. ஆர். இல்லம், தாவடி, கொக்குவில்.

### திருநெல்வேலி, பிள்ளையார் வீதியில் உள்ள அருள்மிகு ஐயனார் தேவஸ்தானத்தில்

4 சாமப் பூசை, விசேட அபிஷேகம் என்பன இடம்பெறும்

- ✶ இரவு 6 மணி முதல்: பண்ணிசை — செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன்
- ✶ இரவு 7-30 மணி முதல்: புல்லாங்குழல் இசை — செல்வன் நக்கீரன் குணராஜா
- ✶ 8-30 — 9-30 வரை: பட்டிமன்றம் — மாணவர்கள் கலந்து கொள்வது
- ✶ 9-30 — 10-30 வரை: சொற்பொழிவு — தமிழருவி த. சிவகுமாரன்
- ✶ 11-00 — 1-00 வரை பட்டி மன்றம் — தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது கவிஞர் கல்யாணசுந்தரம் பாடல்களிலா, கவிஞர் கண்ணதாசன் பாடல்களிலா?

தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகளுடன் இறுதி சாமப் பூசை விசேடமாக நடைபெறும்.

உபயகாரர்கள்,
நிர்வாக சபையினர்

(சி-689)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## வேடதாரியின் குறுக்கு வழி

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையையும், ஆனையிறவுப் பாதையையும் திறந்து விட்டிருப்பதாக அரசாங்கம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. அது முதல் இது விடயத்தை ஸ்ரீலங்கா அரசின் பொதுசன தொடர்பு சாதனங்கள் கடந்த மூன்று நாள்களாக முக்கியத்துவம் அளித்து வாயோயாது கத்துகின்றன.

பாதைகளைத் திறப்பது சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையினை அடிப்படையாக வைத்து சர்வதேசங்களிலும் உள்ள தொடர்பு சாதனங்களும் இவ்விடயத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

ஸ்ரீலங்காவின் முந்திய ஐ.தே.க. அரசாங்கம் தமிழ் மக்கள் மீது விதித்த பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை சந்திரிகா அரசு நீக்கிவிட்டதாக சர்வதேச செய்தி ஏஜென்சிகள் பிரமாதப்படுத்தியும் வருகின்றன!

இந்தச் செய்தியைக் கேட்கும் வெளியார் எவரும். புதிய அரசு மோதல் தவிர்ப்பை உண்டாக்கிப் போரை இடைநிறுத்தியிருக்கிறது; பொருளாதாரத் தடையை நீக்கிவிட்டது; போக்குவரத்துத் தடையையும் நீக்கிவிட்டது; புனரமைப்புப் பணிகளைத் தொடங்கியிருக்கிறது என்று அதனை மெச்சவும் பாராட்டவுமே செய்வர்!

தமிழ் மக்களின் வாழ்க்கையை போர்ச்சூழலில் இருந்து இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்திருக்கிறது என்றே நம்புவர்.

அந்த வகையில் அரசாங்கத்தின் ஏமாற்றுவித்தை, வெளிநாடுகளை — குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளை — மயக்கி தன்வசமாக்கும் வித்தை பலிக்கும் வாய்ப்பு அதிகம் உண்டு.

இத்தனைக்கும், உண்மையான காட்சி, தளநிலைமை, யதார்த்தம் முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது எந்த விடயமுமே சரிவர, ஒழுங்காக, சீராக, முறைப்படி தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீள்விக்கும் அளவுக்கு எதுவும் நடக்கவில்லை

போக்குவரத்துப் பாதை திறப்பது பற்றிய அரசின் அறிவிப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கான அவரது காரணங்கள் தெளிவானவை; நியாயமானவை. தங்களது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் விளக்கியுள்ளார். அரசாங்கத்தின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி உள்ளார்.

அரசாங்கம் தனது கனவான் தனத்தை விற்கிறது ஏமாற்று வித்தைகள் நடத்தியும், வேடதாரியாகியும், சமரசப் பேச்சுக்குரிய பண்புகளையும், மரபுகளையும் மீறியும் தனது உள்நோக்கத்தை அடைவதற்காகக் குறுக்கு வழியில் நடக்கிறது.

அரசின் இந்தப் போக்குக் குறித்து தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும். அத்தோடு அரசின்வேடத்தை உலகத்துக்கு அம்பலப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளுக்கு உண்டு

அரசின் ஏமாற்றுப் பிரசாரத்துக்கு எதிர்ப்பிரசாரம் உடனடியாக முடுக்கிவிடப்படாவிடில், உண்மை மறைக்கப்பட்டு, விடுதலைப் புலிகள் மீதேபழிவந்துசேரும் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

மேலும் பாதை திறப்பது சம்பந்தமாக அரசின் நடவடிக்கைக்கு கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளைக் கொண்டு சாதகமான கருத்தை உருவாக்கி, விடுதலைப் புலிகள் மட்டுமே அதனை ஏற்கவில்லை என்று காட்டுவதற்கான முயற்சியிலும் அரசு இறங்கிவிட்டது!

ஆகையால் உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும். அரசின் வேடதாரித்தனத்தைஅம்பலப்படுத்துவது அவசியம். சர்வதேச ரீதியான எதிர்ப்பிரசாரம் உடன் முடுக்கிவிடப்பட வேண்டும். இதில் ஒரு நாள் தாமதம் கூட அரசின் உள் நோக்கத்துக்கு உதவியதாகிவிடும்.

# தமிழீழப் போராளிகளின் தியாகங்களை மின்சாரம், வீதிக்காக விலைபேச முடியாது

## அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 27

''எமது போராளிகளின் தியாகங்களை மின்சாரத்துக்காகவும் வீதிகளுக்காகவும் விலைபேச முடியாது''

இளங்கலைஞர் மன்றத்தின் பதினைந்தாம் ஆண்டு இறுதி நாள் நிகழ்ச்சியில் உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு கூறினார்.

இறுதிநாள் நிகழ்ச்சி கடந்த 25 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்றது.

திரு. கரிகாலன் மேலும் கூறியதாவது:

இராணுவ முகாமை அகற்றிவிட்டு மக்கள் சுதந்திரமான போக்குவரத்தை மேற்கொள்ள பூநகரிப் பாதையைத் திறக்க முன்வராத ஸ்ரீலங்கா அரசு எப்படித் தமிழ்மக்கள் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது? எம்மை ஒரு முற்றுகைக்கு உட்படுத்தி அழிப்பதையே நோக்கமாகக் கொண்டு அரசு செயல்படுகிறது.

தமிழர்கள் பலதடவைகள் ஏமாற்றப்பட்டுள்ளனர் எமது மூத்த அரசியல் வாதிகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து ஏமாற்றப்பட்டுள்ளனர். தனிநாடு என்ற தந்தை செல்வாவின் முடிவுக்கு அமைவாகவே நாம் இன்று ஆயுதப் போராட்டம் நடத்துகின்றோம் நாமும் போராட்ட முன்னேற்றத்திற்காக காலத்துக்குக் காலம் பேசுகின்றோம். எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, சுதந்திர வாழ்வுக்காக ஆயுதப் போராட்டத்தை நிறுத்தத் தயார் எனக்கூறினோம். எனினும் அரசின் பார்வை இன்னமும் எம்மை ஏமாற்றுவதாகவேயுள்ளது.

தமிழனுக்கு வடக்கு-கிழக்கை விட்டுக் கொடுப்பதா? வடக்கை மட்டும் கொடுக்கலாமா? என்று சிந்திக்கிறார்கள் எமது அபிவிருத்திகளைச் செய்வோம் என்று கூறுகிறார்கள் எனினும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கப்பலில் மின்னாக்கிகள் வருகின்றன வீதிகள் செப்பனிட நூலகம் புனரமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன எனக்கூறி உலகை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அபிவிருத்திகளை ஆதரிக்கிறோம் என்று உலக நாடுகளை ஏமாற்றி அவர்கள் வழங்கும் உதவியில் இராணுவத் தளபாடங்களை வாங்க உத்தேசிக்கிறார்கள்.

குடாநாட்டுக்கு அபிவிருத்தி என்றவர்கள் இப்போது யாழ். மாநகரப்பகுதிக்கு மட்டுமே அபிவிருத்தி, புனரமைப்பு என்ற நிலையில் இருக்கிறார்கள்.

அரசு விடுதலைப்புலிகளுக்கும் மக்களுக்கும் இடையில் வெறுப்பை ஏற்படுத்த திட்டமிட்டுச் செயல்படுகிறது.

எமது தலைவர் ஏமாறியதாகச் சரித்திரம் இல்லை. எம்மை அழிப்பதற்கென்றே எதிரிகள் முற்றுகைக்குள்ளாக்கியபோதும் எமது பாரம்பரிய கலைகளையும் தமிழரின் வீரத்தையும் உலகெங்கும் பறைசாற்றும் வகையில் எமது போராளிகள் போரின் மத்தியிலும் கலைகளை வளர்த்து வருகிறார்கள்.

தமிழோடு இசையும் வீரமும் இணைந்தது. போராடும் பூமியில் போராளிகளோடு இணைந்து தமிழன் நிமிர்ந்து வாழ பல்துறைகளிலும் சிறந்து வாழ தீர்க்கதரிசனத்துடன் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் தலைவர் உறுதியுடன் நிற்கிறார்.

ஒரு போரை நடத்தும் நாம் எப்படி வாழவேண்டும் என்ற நோக்குடன் நகர்கிறோம். நாம் தமிழனுக்கே உரிய கலைகளையும் வீரத்தையும் போற்றி முன்மாதிரியாக விளங்கவேண்டும்—

இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

இந் நிகழ்ச்சியில் பேசிய யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கூறியதாவது:

பலமுனைத் தாக்குதலுக்கான தனது இராணுவ வியூகத்திற்கு ஏற்றவகையில் அரசு செயல்படுகிறது. பூநகரி பாதையைத் திறக்க விரும்பாததற்கு இராணுவ நடவடிக்கையைத் தொடர வேண்டும் என்ற நோக்கமே காரணம். உண்மையான சமாதானம் ஏற்பட விரும்பினால் இராணுவ முகாமை அகற்றி மக்களின் போக்குவரத்திற்கு பூநகரிப் பாதையைத் திறந்துவிட வேண்டும்.

ஆனையிறவு பாதையைத் திறக்க அரசும் அதைவிடுத்து பூநகரிப் பாதையைத் திறக்க புலிகளும் முனைகிறார்கள், பூநகரியைத் திறக்க வேண்டும் என்று ஏன் நாம் கோருகிறோம் என்பதை மக்கள் சிந்தித்தால் எமது சிந்தனை மக்களின் விடிவுக்கும் மண்ணின் விடிவுக்குமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்

அரசு தனது படைபலத்தைப் பெருக்க முனையும் போதெல்லாம் புலிகளின் வேகமும் அதிகரிக்கிறது. தரைப்படை கடற்படைகள் முடக்கப்பட்டன தரைப்படையை சிறந்த தாக்க விமானப் படையைப் பலப்படுத்த முனைகிறது. எமது தலைவரின் தூரநோக்கு அதைத் தவிடு பொடியாக்கிறது. இதற்கு ஒரு வழி என்னவெனில் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும்; தோல்வியை ஒப்புக் கொள்ள அரசு தயாரில்லை.

தங்களுடைய ராணுவத் தேவைக்கும் நோக்கத்திற்கும் ஏற்ப பூநகரி முகாமை அகற்றி பாதையைத் திறக்க மறுக்கிறார்கள். தமிழ் மக்களும் உலகமும் இதனை ஏற்கா. ஆனையிறவு திறக்கப்பட்டால் எமது சுதந்திரமும் வாழ்வும் பறிபோகும். அதற்கு நாமும் எமது மக்களும் தயாரில்லை. எமது மக்களின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். நீண்ட சமாதானம் நிலைக்க ராணுவம் விலகிய சுதந்திரமான சுயாதீனமான போக்குவரத்து ஏற்பட வேண்டும். ஆனையிறவு முகாமை எடுக்குமாறு நாங்கள் கோரவில்லை. ஆனையிறவை விலக்கக் கேட்பது நியாயமல்ல. அரசு இருந்த நிலையில் இருந்து கொண்டு சமாதானம் காண வேண்டும் எனில் அது எப்படி முடியும்?

ஐநூறு மீற்றர் விலகிநிற்கும் இராணுவம் ஐந்து நிமிடத்தில் பாதையைத் தடுக்க முடியும். இந்த நிலையில் துயரம் தொடரும்

மக்களின் மனதில் நம்பிக்கையையும் நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்த எமது கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பாதையைத் திறப்பதே சரியானது

சமாதானத்தை ஏற்படுத்துவோமென சிங்கள மக்களுக்கு வழங்கிய உறுதியினாலேயே சர்வவல்லமை கொண்ட ஜனாதிபதியாக சந்திரிகா வந்தார். ஆனால் இப்போது பாதைமாறிச் செல்கிறார். சரிந்த கடற்படையை நிமிர்த்த தாங்கள் வகுத்துள்ள வியூகங்களான பலமுனைத் தாக்குதல்களைத் தொடர — பூநகரி நாகர்த்தலிலிருந்து ஆனையிறவைத் திறக்க முயற்சிக்கிறார்கள்.

பூநகரி ராணுவம் அகற்றப்படுமானால் அரசு சமாதான சூழலை ஏற்படுத்தும். சேந்தாங்குளம் பாதையை உணவுப் பொருள் எடுத்து வரும் பொருட்டு நாம் திறக்க அனுமதித்தோம். நடந்ததென்ன? மாதகல் பகுதிக்கு இராணுவம் வந்தது.

எமது தலைவர் விட்டுக் கொடுத்தல், நல்லெண்ண வெளிப்பாடுகளைக் காட்டும் போது ஏன் இழுத்தடிக்கிறது சந்திரிகா அரசு? அரசியல் தீர்வுக்கு எதிரான செயற்பாடுகளால் நாம் ஒரு நிலைக்கு வரவேண்டும். எமது சுதந்திரத்தை, தமிழீழத்தைப் பெறுவதற்கான சரியான பார்வை இருத்தல் வேண்டும் — இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

மன்றத் தலைவர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், திரு. சோமசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். [க-111]

### புலிகளின் குரல் வானொலியில்

27 — 02 — 1995

திங்கள் இரவு

★ 8-01 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — எங்களின் தேசம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம்— நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் அரியாலையூர் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களுடனான செவ்வி என்பன இடம் பெறும்.

28 - 02 - 1995

செவ்வாய் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள் என்பன இடம் பெறும்.

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

திங்கள் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — நேயர் நெஞ்சம்
★ 6-20 — என் தெரிவு

## திருமலை மாவட்டத்தில்

## புதிய காவலரண்களை இராணுவம் அமைக்கின்றது

திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பத்தைக் கிராமம் உட்பட பல பகுதிகளிலும் படையினர் புதிய பல காவலரண்களை அமைத்து வருவதாகவும்—

பழைய காவலரண்கள் மேலும் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை— திருமலை மாவட்டத்தில் குக்கிராமங்களுக்கு உணவுப்பண்டங்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் உச்சவரம்பு இட்டுள்ளதால் இங்குள்ள மக்கள் பெரும் உணவுக் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும்—

அங்கு தொடர்ந்து இராணுவத்தினர் வீடு வீடாக சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம் கலட்டி மெ.மி.த.க. பாடசாலையில் கற்பித்தல் துணைச் சாதனக் கண்காட்சி ஒன்று அடுத்த மாதம் முதலாம், 2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலந்திரன் கண்காட்சியை தொடக்கி வைப்பார். (ஐ)

## இன்று

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்தும் நாடகப் பயிற்சிப் பட்டறை இன்று (திங்கள்) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை, யாழ். புனித சாள்ஸ் வித்தியாலயத்தில் நடைபெறும். (எ-14-51)

★ ★ ★

உரும்பிராய் — பேய்ச்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் 'கூட்டு வழிபாட்டு பாமாலை' நூல் வெளியீடு இன்று (திங்கள்) மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (எ-14)

## இலவச வைத்திய சேவை

வட்டுக் கோட்டை, பெப்.27

வட்டு. லயன்ஸ் கழக தொண்டேயம் பயிற்சி நிலையத்தில் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 3 மணி முதல் 4 30 மணிவரை லயன்ஸ் வைத்திய கலாநிதிகளின் ஒருங்கிணைந்த இலவச வைத்திய சேவை நடைபெறுகிறது. (க-161)

## கூட்டம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 27

1994 - 95 ஆம் கல்வி ஆண்டுக்கு பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக வெளியான வெட்டுப்புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை வடமராட்சி மாணவர்களுக்கான ஒன்றுகூடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறும். (ஐ-7)

## சீமெந்து ஊழியருக்கு சம்பளம்

லங்கா சீமெந்து நிறுவன சகல ஊழியர்களுக்குமானதை, மாசி மாத சம்பளக் கொடுப்பனவுகள், நாளை செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## போரைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு.எஸ்.பாபு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனவரி மாதம் 8 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்த மோதல் தவிர்பு உடன்படிக்கையை மீறும்பல செயல்களில் படையினர்தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி கொம்மாந்துறையில பொது மக்களை ஏற்றிவந்த வாகனத்தின் சாரதியும், அதன் நடத்துனரும் தாக்கப்பட்ட சம்பவம் போன்று பல சம்பவங்கள் இதுவரை நடந்துள்ளன.

இராணுவம் மட்டுமன்றி அதன் சார்பானவர்களும் வீதிச் சோதனைகள் மற்றும் விசாரணைகளில் ஈடுபடுகின்றனர். இது அரசாங்கத்துக்கும், எமக்கும் உள்ள உடன்படிக்கையை மீறுகின்ற செயலாகும்

படுவான்கரைக்கு அத்தியாவசியப் பொருள்களை கொண்டு செல்வதற்கும் இன்னமும் தடைகள் உள்ளன.

இது இவ்வாறிருக்க அரசு ஒருதலைப்பட்சமான குற்றச்சாட்டுக்கள் மூலம் நிலைமையை தனக்கு சாதகமாக்க நினைக்கிறது.

வெல்லாவெளியில் உள்ள 40 ஆம் கிராமப்பகுதியில் இராணுவம் பகிரங்கமாக ஒத்திகையில் ஈடுபட்டுவருவது மக்கள் மத்தியில் பீதியை தோற்றுவித்துள்ளது —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-3)

# ஜோதியினுள்ளே சிவன் தனது திருவுரு காட்டிய சிவராத்திரி இன்று

சிவ விரதங்களுள் சிறந்தது சிவராத்திரி சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை, சோம சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பக்க சிவராத்திரி, மாத சிவராத்திரி, மஹா சிவராத்திரி என்பன. மஹா சிவராத்திரி, மாசி மாத கிருஷ்ண பட்ச திரியோதசி மருவிய சதுர்தசித் திதி கூடிய தினத்தன்று வரும். சதுர்த்தசி சிவ தோற்றமும் திரியோதசி சக்தி தோற்றமும் கொண்டவை. இன்று அர்த்த ராத்திரியில் சதுர்த்தசித் திதி நிற்கின்றமையினால், இன்றைய தினம் மஹா சிவராத்திரி என்று கொள்ளப்பட்டுச் சிவாலயங்களில் சிவ வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும்.

சிவராத்திரியின் தோற்றம் பற்றிய இரண்டு வரலாறுகளைச் சிவராத்திரி புராணம் கூறுகிறது. முதல் வரலாறு; ஒரு கற்ப முடிவில் எல்லா உலகங்களையும் சிருட்டித்த பிரமதேவர் இறந்தார். மும்மூர்த்திகளின் ஆயுட்காலம் முடிந்தது. உலகங்கள் ஒடுங்கின. மேகங்கள் திரண்டு மழை பொழிந்தன பெருகிய பிரளய வெள்ளத்தில் மூழ்கி சகல உயிர்களும் அழிந்தன. கொடிய இருள் சூழ்ந்தது. அமைதி நிறைந்த அந்தகாரம் நிலவியது.

சிவமும் சக்தியும் அன்றி வேறு ஒன்றும் இல்லை, என்று சொல்லப்படுகிற அந்த 'மகா பிரளய' நேரத்திலே, உமையம்மை தமது திருவுள்ளத்திலே, ஆறாத அன்பு கொண்டு, பரிசுத்த நித்தராகிய சிவபிரானை வேதாகமங்களிற் கூறப்பட்டுள்ள விதி முறை தவறாமல் அர்ச்சனை புரிந்தனள்

யுக முடிவின் இரவாகிய நான்கு யாமமும் கழிந்த பின்னர் இறைவனைப் பணிந்த இறைவி ''தேவாதி தேவா நான் தங்களை வழிபட்ட இந்த இரவைத் தேவர்களும். பூமியில் உள்ளவர்களும் 'சிவராத்திரி' என்று கூறவும், எத்தகைய தாழ்ந்த நிலையை உடையவராயினும், இச் சிவராத்திரி விரதத்தை அனுட்டித்து, தேவரீரது திருவடித்தாமரைகளை, இடையறாது சிந்தனை செய்து, சூரியன் கிழக்குத் திசையில் தோன்றுமளவும், அவாவுடன் அர்ச்சனை செய்யின், அவர்களுக்கு முத்திப்பேற்றையும் அளிக்க வேண்டும்'' என்று யாசித்து நின்றனள். மனம் மகிழ்ந்த மஹாதேவர் ''அவ்வண்ணமே ஆகுக'' என அருள் புரிந்தார்.

அடுத்த வரலாறு:- பின்னும் ஒரு கற்ப முடிவில் சப்த மேகங்களும் திரண்டு மழை பொழிந்தன. பிரளய வெள்ளம் பெருகியது 'பிரம பிரளயம்' என்று சொல்லப்படுகிற அந்த நேரத்திலே பிரமதேவர் இறக்க, அவரால் சிருட்டிக்கப்பட்ட உலகங்களும், உயிர்களும் பிரளய வெள்ளத்தில் மூழ்கி அழிந்தன. ஆன்மா[illegible] பொருட்டுச் சிவபிரான் யோக நிலையில் இருந்தார்.

அந்தக் கற்பமுடிவில், இறவாத இயல்பு பெற்ற மேகவண்ணராகிய நாராயண மூர்த்தி, தாம் முன்னே காத்தருளிய சாரசரங்களை (அசை தன்மையும் அசையாத தன்மை உள்ளவற்றை) மீண்டும் படைத்தற் பொருட்டுப், பிரளய வெள்ளத்தில் மூழ்கிய உலகை முன்போல நிறுத்த எண்ணி வெள்ளைப் பன்றியின் உருவெடுத்து. உலகைக் கொம்பில் இருத்திக் கொண்டு வந்து நிறுத்தி விட்டுத் தனது உந்திக் கமலத்தினின்றும பிரம தேவரைத் தோற்றுவித்துப் பண்டு போல உலகைப் படைக்கப் பணித்து விட்டு அறிதுயில் புரிந்தார்.

பிரமதேவர் உலகங்களையும் தேவரையும் அசுரரையும் மனிதரையும் படைத்து அவை சிறந்து பெருகும்படி செய்தார் இந்திரனை வானுலக ஆட்சியில் நியமித்தார். திக்குப் பாலகர்களை அவரவர்களுடைய பதவிகளில் இருத்தினார் பின்னர் தான் சிருட்டித்த உலகங்களை உற்று நோக்கி என்னிலும் மேலான தலைவர் இல்லை என்று கர்வம் கொண்டு நின்றபோது, நாராயணக் கடவுள் ''உலக ஆக்கத்திற்கும் அழிவிற்கும் நானே காரணம்'' என்ற அகந்தையுடன் சர்ப்ப சயனத்தில் [illegible] யோக நித்திரையில் இருப்பதைக் கண்டார். அவர் அறிதுயில் புரியும் அழகைக் கண்ட பிரமதேவர் பொறாமை கொண்டு அவருடைய மார்பில் அடித்துத் ''துயில்கின்ற நீ யார்'' என்று இறுமாப்புடன் கேட்டார்

''இந்த உலகங்களையும் சராசரப் பொருள்களையும், உன்னையும் படைத்த மேலான தத்துவத்தையுடைய உனது தந்தையாகிய என்னைத் தெரியவில்லையா'' என்று ஆணவத்துடன் கேட்டார் நாராயணமூர்த்தி.

''யாமே மேலானவர்'' ''யாமே மேலானவர்'' என்று தம்முள் ஆணவம் கொண்ட திருமாலும் பிரமனும் கொடிய போரைச் செய்தனர் போரின் போது பிரயோகிக்கப்பட்ட படைக்கலங்களின் வெப்பம் தாங்காது சமுத்திரங்கள் வற்றின. உலகங்கள் எரிந்தன. உயிர்கள் துன்புற்றன. சந்திர சூரியர் செல்லும் தடம் அறியாது தடுமாறினர்.

உலகங்களையும் உயிர்களையும் பிரம விட்டுணுக்களையும் இறவாமற் காத்தருளச் சித்தம் கொண்ட சிவபிரான், இருவருக்கும் இடையில் ஒரு [illegible] பிழம்பாக நின்றார். பிரம விட்டுணுக்கள் பிரயோகம் செய்த படைக்கலங்கள், ஜோதியில் விழுந்து வெந்து நீறாயின. அவர்கள் செய்வதறியாது திகைத்து நின்ற போது ''இந்தச் சோதியின் அடியையும் முடியையும் கண்டவரே உயர்ந்தவர்'' என்று விண்ணில் ஒரு குரல் எழுந்தது

இந்தச் சோதியின் அடியை ''யான் தேடுவேன்'' எனறு கூறிய திருமால் பன்றி உருவெடுத்து மண்ணுள் புகுந்தார். அன்னப்பட்சி வடிவம் கொண்ட பிரமா விண்ணில் பறந்தார். பலகாலம் தேடியும் இருவரும், அடியையும் முடியையும் காணாது வெட்கமும் துக்கமும் சலிப்பும் அடைந்து பாதாளத்திலிருந்தும் விண்ணிலிருந்தும் மீண்டனர்

இருவரும், தம்மிலும் மேலான ஒன்று உண்டு என்று தெளிந்த சிந்தையராகித் துதித்தலும் ஜோதியிலுள்ளே தம் திருவுருவைக் காட்டி நின்றார் சிவபிரான் சிவபிரானைத் தரிசித்த திருமாலும் பிரமனும் ''ஐயனே அன்பர்க்கு மெய்யனே. மாயையினால் அகந்தை கொண்டு, அறிவு மயங்கி வீணே போரிட்டோம். தேவரீருடைய அடியையும் முடியையும் அறியும் ஆற்றல் எமக்கு இல்லை. எங்கள் பிழையைப் பொறுத்தருள்க'' என்று வேண்டி நின்றனர்.

கருணையே வடிவான சிவமூர்த்தி பிரம விட்டுணுக்களை அன்புடன் பார்த்து ''நீவிர் விரும்பிய வரங்களைக் கேட்கக் கடவீர்கள். அவ்வரங்களைத் தருவோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ட்டற்ற மகிழ்ச்சியடைந்த பிரமனும், திருமாலும், ''ஆன்மாக்களுக்கு அருள் பொழிகின்ற கண்ணுற்ற பெருமானே, தாங்கள் அக்கினிப் பிழம்பாக நின்ற இந்த இரவு சிவராத்திரி என்று பெயர் பெறவும், அதில் விட்டிற் பூச்சிகளாய் விழுந்து வெந்து நீறாகிய எங்கள் படைக்கலங்களைத் தந்து அருள் புரிவதுடன், யாம் புரியும் படைத்தல், காத்தல் ஆகிய இருதொழில்களும் குறைவின்றி நிலைபெறவும் அருள் புரியும்'' என இரந்து நின்றனர்.

அவர்கள் வேண்டியவாறு வரம் அருளிய சிவபிரான் பிரம விட்டுணுக்களே. ஆதியில் அம்பிகை வழிபட்ட சிவராத்திரி விரதத்தின் சிறப்பை அளந்து கூறுதல் அரிது. உள்ளன்புடன் எம்மை வழிபட்டு விதிப்படி விரதம் அனுஷ்டிப்பவர்கள் இம்மையில் (இந்தப் பிறப்பில்) விரும்பிய இன்பங்களையும், மறுமையில் (மறு பிறப்பில்) சகல பாக்கிய போகங்களையும், அம்மையில் (மறு உலக வாழ்வில்) எமது திருவடிகளையும் அடைவர் என்று கூறி மறைந்தருளினார்.

சிவராத்திரி விரதத்தின் தினத்தையோ, சிறப்பையோ அறியாமல், சூழ் நிலையின் காரணமாக அதன் முக்கிய அங்கங்களாகிய உண்ணாமை, உறங்காமை, அர்ச்சனை என்பவற்றை மேற்கொண்டு சிவானுக்கிரகம் பெற்று முத்தியடைந்தவர்களின் வரலாறுகளைச் சிவராத்திரி புராணம் பேசுகிறது. ★

- மூளாய் அருணாசலம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நவாலி முருகானந்த சனசமூக நிலையம்,
நவாலி

# சிவராத்திரி விழா

## இன்றிரவு அதிவிசேட நிகழ்ச்சி

சுழலும் சொற்போர் (10-00 மணி)

தலைவர்: திரு. பொன். கணேசமூர்த்தி

விடயம்: ஆறுவகைச் செல்வங்களில் மேலான செல்வமெது?

பொருட் செல்வம — எஸ். வாமன்
அருட் செல்வம் — என். விஜயசுந்தரம்
கல்விச் செல்வம் — க. வேல்நம்பி
கேள்விச் செல்வம் — நித்தியானந்தன்
அறிவுச் செல்வம் — கோக்கலே
மக்கள் செல்வம் — கே. எஸ் முத்துலிங்கம்

இடம்: நவாலியூர் முருகமூர்த்தி கோயில்

எடிசன் அக்கடமி,
யாழ்ப்பாணம் — கொக்குவில்.

(சி 688)

# மரண அறிவித்தல்கள்

செல்வி
## சிவகங்கா சிவசுப்பிரமணியம்
(காரைநகர்)

காரைநகர், களவிற்பிட்டியைப் பிறப்பிடமாக் கொண்டவரும், தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமாகிய சிவசுப்பிரமணியம் - கமலாவதி தம்பதிகளின் இளைய புதல்வி செல்வி சிவகங்கா 22 02-95 புதன்கிழமை அவுஸ்திரேலியாவில் அகால மரணமானார்.

அன்னார் Dr சிவகுமார், சிவசக்தி (Economist Reserve Bank of Australia), சிவபக்தன் (Bar - at- Law. M D.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளினதும், திருமதி வேலுப்பிள்ளை - இராசம்மா (மலேசியா) ஆகியோரின் பேர்த்தியும், திருமதி தபோமணி தில்லைநாதர், காலஞ்சென்றவர்களான திருமதி காமாட்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை, திருமதி புஸ்பலீலாவதி வைத்திலிங்கம், திரு நடராசா ஆகியோரினதும், திருமதி பத்மாவதி கந்தையா, திருமதி திலகவதி கந்தையா ஆகியோரினதும் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரினது இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தபோமணியும், சகோதரிகளும்,
(மாமிமார்)

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி
சந்தைக்கு முன்பாக)

(35412)

## சபாபதிப்பிள்ளை சுந்தரலிங்கம
[புங்குடுதீவு]

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்து வெளியை பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சபாபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் 24-2-95 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை -பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புமருமகனும், மல்லிகாதேவியின் (மல்லிகா) அன்புக் கணவரும், சுபாஸ்கரன், சுதாகரன் சுசிகரன், சுசிகலா, சுவிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரரும் தியாகராசா (ஜேர்மனி) சாந்தகுமாரி, புஸ்பராணி சிவகுமார் (ஜேர்மனி), சத்தியவாணி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்று (26 02. 1995) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
க கனகம்மா (சகோதரி)
ப. தயானந்தன் (சகலன்)
(புங்/நயி. பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்)

'முருகபதி'
புகையிரத வீதி (ஆடியபாதம் வீதி)
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(35413)

## கதிர்காமு தம்பித்துரை
(C. T. B சாரதி)

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த கதிர்காமு தம்பித்துரை நேற்று காலமானார். இவர் விமலராணியின் அன்புக் கணவரும், ஜெயசீலன் (சுவிஸ்), ஜெயகரன் (சுவிஸ்), ஜெயா ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான இராசதுரை, அப்புத்துரை மற்றும் செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், புனிதவதி, பத்மாவதி (ஆசிரியை), கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27-2-95 நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் வேம்பயன் மயானத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. லோறன்ஸ்
(சகலன்)

விழாத்தியடி,
உரும்பிராய் மேற்கு

(35417)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# விளையாட்டு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன

யாழ் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு அதிகாரிகளுக்கும் மாவட்ட விளையாட்டு அதிகாரிக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ் செயலகத்தில் வைத்து வடக்கு - கிழக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை அமைச்சு உதவிப் பணிப்பாளர் திரு. எம். ஜீவரட்ணம் இந்த உபகரணங்களை அண்மையில் வழங்கினார்.

திருமலையில் இருந்து வந்துள்ள திரு. ஜீவரட்ணம், யாழ். மாட்ட கழக உதைபந்தாட்ட விரர்களுக்கும், யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட வீரர்களுக்கும் தனித்தனியாக இரண்டு — குறுகியகால — பயிற்சி முகாம்களையும் நடத்தினார்.

வடக்கில் உள்ள சில பாடசாலைகள் மற்றும் யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

மாகாணசபையின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளரும், விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளருமான திரு. கே. யோகநாதனின் ஏற்பாட்டில் இந்த உபகரணங்கள் வடக்கே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

விளையாட்டு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் அந்தந்த விளையாட்டு அதிகாரிகளின் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டு மத்திய நிலையத்தில் பயிற்சிக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## பாண்—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும்—

சங்கப் பிரதிநிதிகள் அது தொடர்பாக வழங்கிய விளக்கம் அங்கீகரிக்கப்படாத நிலையில் சங்கப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர் என்றும்—

சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்—

மா விநியோகம் சம்பந்தமாக உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் சங்கத்துக்கும் ஒரு பரிந்துணர்வு ஏற்பட்டு மா விநியோகம் சீராக நடைபெறும் என்ற உறுதி கிடைக்கும் வரை சங்க அங்கத்தவர்கள் யாவரும் பாண் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை என்றும்—

வேறுவிதமாக மாவினைப் பெற்று ஏனைய உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதில்லை என்றும்—

சங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சந்திரிகா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பான உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவே அவர் செல்கிறார்.

இந்த உச்சி மாநாட்டில் 130 நாடுகள் கலந்து கொள்கின்றன. இவற்றின் 110 நாடுகளின் தலைவர்கள் தாங்கள் நேரில் சமுகமளித்து கலந்து கொள்வதாக அறிவித்துள்ளனர்.

சந்திரிகாவுடன் பிரெஞ்சு ஜனாதிபதி பிராங்கோயி மித்தரண்ட், சீன ஜனாதிபதி லீபெங், ரஷ்ய சம்மேளன ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின். தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, அமெரிக்க உபஜனாதிபதி அல் கோரே மற்றும் இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை — எதிர்வரும் மே மாத முற்பகுதியில் புதுடில்லியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் சார்க் உச்சி மாநாட்டிலும் சந்திரிகா கலந்து கொள்ளவிருக்கிறார் என தெரிவிக்கப்படுகிறது.

தமது இந்தியப் பயணத்தின் போது. இந்தியா வழங்கும் பல லட்சம் ரூபா பெறுமதியான கடனுதவி உடன்படிக்கை ஒன்றில் சந்திரிகா கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர்
திரு. K. T. தவச்செல்வனின்
தாயார்

## திருமதி தி. மங்கையர்க்கரசி


அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவிக்கிறோம்.

நிர்வாகி. சக ஆசிரியர்கள்,
ஆண்டு 10 - மாணவர்கள்.

எலைற் கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

[35416]

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கைலாயபிள்ளை கந்தசாமி

[முன்னாள் பிரதி அதிபர், யாழ் மத்திய கல்லூரி]

மண்ணகம்: 20 - 05 - 1931
விண்ணகம்: 02 - 03 - 1992
திதி: 27 – 02 – 1995

நீங்கள் பிரிந்து மூன்றாண்டுகள் ஆனாலும் தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சை விட்டு அகலா. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

36, இனிசியம் வீதி,
தெஹிவளை.

(35426)

## காணி அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, பெப் 27

வல்வை மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவர்கள் மேற்படி வித்தியாலயத்துக்கு மைதானம் அமைப்பதற்கென 5½ பரப்பு வெற்றுக்காணியைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (க-155)

## கடற்படைக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். மீதான எந்த கூட்டுப்படைத்தாக்குதலிலும் முக்கிய பங்கு வகிக்கும் கடற்படையின் பலத்தை அதிகரிப்பதற்கு தற்போதைய சமாதான முயற்சி அரசாங்கத்திற்கு தடை போடுவதாக இருக்கக்கூடாது என்றும் அப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என்று 'தஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போதைய சமாதான முயற்சி தோற்றால், சண்டையிட விடுதலைப் புலிகள் தயாராக இருப்பார்கள் என்றும் பகுப்பாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

## தேர்தலின்போது-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளது

இந்த இராணுவச்சதி முயற்சி பற்றி இரகசிய பொலீஸார், இதில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள முன்னாள் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா, இராணுவ பிரதம நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மற்றும் பல அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் தற்போதைய தளபதி லெப். ஜெனரல் ஜெரி டீ சில்வா மற்றும் பல அதிகாரிகளின் வாக்கு மூலங்களையும் இரகசியப் பொலீஸார் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இச்சதி முயற்சி விசாரணை பொலீஸ் அதிபர் ஒருவரின் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

அடுத்த வாரம் விசாரணைக்குட்படுத்தப்பட இருக்கும் பிரிகேடியர்களில் இருவர், கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் யாழ். நிலைவரம் ஆகியன குறித்து அப்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவை அடிக்கடி சந்தித்து விவரம் தெரிவிக்கும்படி இராணுவத் தலைமைப்பீடத்தினால் பணிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததை அடுத்து, அந்த இராணுவச் சதி முயற்சிக்கு பக்கபலமாக செயற்பட்டனர் என்று கருதப்பட்ட அதிகாரிகள் சிலரின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சதி முயற்சியில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட படை அதிகாரிகள் அனைவரும் முன்னாள் தளபதி சிசில் வைத்தியரத்னாவின் ஆதரவாளர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை அறிக்கையை இரகசியப் பொலீஸார் அடுத்த மாதத்தினுள் ஜனாதிபதி செயலகத்திடம் சமர்ப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை நடந்த விசாரணைகளின்படி, இராணுவச் சதிப்புரட்சி ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த தற்கான சாட்சியங்கள் ஏதும் வெளிவரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது [எ]

## மரண அறிவித்தல்

### கந்தவனம் கணபதிப்பிள்ளை
(சின்ன ஊமை)

கட்டுவன் ஊரங்குணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தவனம் கணபதிப்பிள்ளை [சின்ன ஊமை] அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் அன்னம்மாவின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கள் [27-2-95] சுன்னாகம் புகையிரத நிலைய வசிப்பிடத்தில் பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும்.

இதனை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகலிங்கம்
[மகன்]
அரசன்
(மருமகன்)

(35423)

## பாதை திறப்பது...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்களின் அன்றாட அவலங்களைப் போக்கும் வகையில் அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டதாக அவர் மிகைப்படுத்திக் கூறுகிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், வடமாநிலத்திற்கும் மத்தியில் பாதை ஒன்றைத் திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும். இந்த முக்கிய விடயத்தில் எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்துவிட்டு, பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் மக்களுக்குத் திறந்து விடப்பட்டிருப்பதாக, ஒருதலைப்பட்சமான முறையில், அவர் அறிவித்தல் ஒன்றையும் விடுகின்றார். இது அரசின் பழைய பல்லவிதான். இந்த அறிவிப்பானது பொய்யான பிரசார இயக்கத்திற்கு உதவலாமே தவிர, சமாதான சூழலை முன்னெடுக்க உதவப் போவதில்லை. இதையிட்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த ஒருதலைப்பட்சமான அறிவிப்பு ஒரு விடயத்தை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது, பரந்துபட்ட தமிழ் மக்களின் அவசர தேவைகளுக்கு மேலானதாக, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தின் போர்த்தந்திரோபாய நலன்களுக்கே அரசாங்கம் முதன்மை கொடுக்கிறது.

பொருளாதாரத் தடைகள் முற்றாக நீக்கப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள், பெற்றோல், டீசல், வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள் உரவகைகள், பற்றறிகள் போன்ற எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்விற்கு அத்தியாவசியமான பொருள்கள் அனைத்தும் இராணுவப்பண்டங்கள் என்ற முத்திரை குத்தி தடுத்துவைக்கப்பட்டுள்ளன, அதுமட்டுமன்றி, தடைநீக்கப்பட்டதாக கூறப்படும் பொருள்கள்கூட, வவுனியாவில் இராணுவத்தினர் தம்பாட்டில் திணிக்கும் தடைகளால் மக்களை வந்தடைவதில்லை, இதுதான் உண்மையான எதார்த்த நிலை, இந்த உண்மை நிலையை வடக்கிலுள்ள எமது மக்கள் நன்கு அறிவார்கள், நிலைமை இப்படியிருக்க சகல அத்தியாவசியப் பொருள்கள் மீதுள்ள தடைகள் நீக்கப்பட்டு விட்டதாக திரு பாலபட்ட பெண்டி அவர்கள் எமக்கு அறியத்தருகிறார், உண்மையைத் திரித்துக்காட்டும் இத்தகைய பொய்ப்பிரசாரங்கள் எமது மக்களின் துன்பத்தை துடைத்துவிடாது; சமாதான நலனையும் பேணிவிடாது.

தற்போதுள்ள தற்காலிக மோதல் தவிர்ப்பு நிலையை ஒரு முழுமையான, உறுதியான போர் நிறுத்தமாக மாற்றும் விடயத்தில் அரசாங்கம் காட்டும் அசமந்தப் போக்கு எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இது குறித்து நாம் பல கடிதங்களை அரசுக்கு எழுதியிருக்கிறோம் மோதல் தவிர்ப்பு ஒழுங்குமுறை சம்பந்தமாக எழுந்துள்ள பல்வேறு சிக்கல்களுக்கும பிரச்சினைகளுக்கும் நாம் விளக்கம் கோரியபோதும் அரசாங்கம் இதுவரை உருப்படியான பதிலெதையும் தரவில்லை. அரசாங்கத்தின் அக்கறையினமான போக்குக் காரணமாக, வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை உருவாக்குவதில் பெரும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. சமாதானத்தை பேணுவதில் இந்தக் குழுக்களின் பங்கு மிகவும் முக்கியமானது இந்த பாரதூரமான விடயங்களைத் தீர்த்து வைக்க அரசாங்கம் தவறுமானால், சமாதான சூழ்நிலைக்கு இது பெரும் பங்கம் இழைத்துவிடும்.

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடை நீக்கப்படுவது, யாழ்ப்பாணத்திற்கான பாதை திறக்கப்படுவது, போர்நிறுத்த நிலைமையை பலப்படுத்துவது ஆகியன, வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கு அத்தியாவசியமானவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் எனவேதான் இந்த விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுமூலம் இணக்கப்பாடு காணவேண்டும். அப்படியானதொரு இணக்கப்பாடு ஏற்பட்டால்தான் பெரிய அளவிலான புனர்நிர்மாண திட்டங்களை செம்மையான முறையில் செயற்படுத்துவது சாத்தியமாகும்.

புனர்நிர்மாண வேலைகளை திட்டமிட்டு செயற்படுத்த தகுந்த அதிகாரங்கள் கொண்டதாக ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அதில் அரச பிரதிநிதிகளும், புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் கடந்த சுற்றுப் பேச்சின் போது விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளை அரச தரப்பினர் ஏற்றுக்கொண்டனர். எனவே பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்றும், அதன்மூலமே புனர்நிர்மாணம் செவ்வனே செய்ய முடியும் என்பதையும் நாம் வலியுறுத்துகிறோம்.

இப்படிக்கு
உங்கள் நேர்மையுள்ள
(வே. பிரபாகரன்)
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

# மரண அறிவித்தல்கள்

## தம்பிஐயா இராசலெட்சுமி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் குறிகட்டுவானை பிறப்பிடமாகக் கொண்டவரும், 15/10, இராமநாதன் வீதியை [நாச்சிமார் கோயிலடியை] வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி தம்பிஐயா இராசலெட்சுமி நேற்று பிற்பகல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற முத்துவேலு தம்பிஐயாவின் மனைவியும், கண்ணன், இராசேந்திரம் [பிரான்ஸ்], விஜயலெட்சுமி. மோகனதாஸ் [வர்த்தகர், கொழும்பு], பாக்கியலெட்சுமி[ஜேர்மனி] நாகேஸ்வரி, மனோன்மணி [கனடா], தெய்வேந்திரம் [கோணேஸ்–சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரிதேவி, மனோரம்மா [பிரான்ஸ்], நடேஸ்வரன் [ஜேர்மனி], கமலகுமாரி, [கொழும்பு], பற்பநாதன் [ஜேர்மனி], கருணாநிதி [சாயி போட்டோ], வசந்தன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்:
கண்ணன்
[மகன்]

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[35418]

## பாலாம்பிகாதேவி தாமோதரம்பிள்ளை

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலாம்பிகாதேவி லண்டனில் காலமானார்.

இவர் காலம் சென்ற சட்டத்தரணி தாமோதரம் பிள்ளையின் அன்பு மனைவியும், Dr. பத்மாசினி (லண்டன்), பத்மினி, பரிமளா, பிரபாகரன் (System Consultant, Management Solutions PTY, Ltd, அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr. பூரணமூர்த்தி [லண்டன்], துரைசிங்கம், கணேஷன் [திருநாவுக்கரசு அன் சன்ஸ், கோண்டாவில்], புனிதா [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருபா [லண்டன்], பிரவீன் [லண்டன்], பிரதீபன், துஷ்யந்தன் [லண்டன்], திருமதி துகிலா ஜெயகுமார் [டென்மார்க்], துவாரகா, புவிராஜ் [லண்டன்], கோகிலராஜ் நிஷா [அவுஸ்திரேலியா], றொசானா [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு லண்டனில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
K. C. கணேஷன்
(மருமகன்)

இருபாலை வீதி,
கோண்டாவில்.

(35421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org